258 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவியை வரன்முறைப்படுத்தும் தேதியை 21-3-1974க்கு மாற்றியதால் ஏற்பட்டுள்ள அவதி குறித்து

தாலும் ஐந்து ஆண்டுகள் ஆசிரியர் பணி புரிந்திருந்தால் அவர்கள் மற்ற வகைகளில் அப்பதவிக்குத் தகுதியுடையவரெனத் தேர்வாணைக் குழுவினால் கருதப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். தமிழாசிரியர்களை பொதுப்பணி தேர்வாணைக் குழுவினால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர முதல்நிலைத் தமிழாசிரியராக பதவி உயர்வு பெற இவ்விதி பொருந்தாது.

(முற்பகல் 11-10)

திரு. எம். சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, கல்வி இயக்குநருடைய நடவடிக்கை 6-10-1972-ன்படி ஒரு ஆசிரியரை, மூனபு ஐந்தாண்டுகளாகப் பணி புரிந்தவரை, தேர்ந்தெடுக்கலாம் என்று தேர்வாணைக் குழு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. நான் குறிப்பிடுவது அவர் அதற்கு முன்னால் இடைநிலை இரண்டாம் நிலை தமிழாசிரியராக 30 வயதுக்கு முன்னால் நியமிக்கப்பட்டு, அதே பள்ளியில் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு பெற்றவர். அவர்கள் எந்தத் தேதியில் பதவி உயர்வைப் பெற்றார்களோ அந்தத் தேதியில் வரன்முறைப்படுத்தப்பட்டு, தகுதிகாண் பருவம் முடியப் பெற்றவர். திரும்பவும் மாறுதல் உத்தரவைத் தேர்வாணைக் குழு அளித்ததால், அதில் அவருக்குச் சலுகை அளிக்க அரசு பரிசிலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், பல ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தில் ரூ. 90-க்கு அதிகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினர் கருத்து பரிசீலனை செய்யப்படும்.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததனால் இந்த ஆலை மூடப்பட்டது. இதனால் இப்பகுதிகளில் உள்ள தொழிலாளர் வகுப்பினருக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்டுள்ள இடர்பாடு குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கோத்தாரி சர்க்கரை மற்றும் கெமிகல்

லிமிடெட் என்ற நிறுவனம் சுமார் 832 தொழிலாளர்களைக் கொண்டது. இவ்வாலையில் உள்ள தொழிலாளர்கள் கீழே குறிப்பிட்டுள்ள தொழிற்சங்கங்களில் அங்கத்தினராக உள்ளனர் :—

1. திருச்சி ஜில்லா சர்க்கரை ஆலை அண்ணா தொழிலாளர்கள் சங்கம் (ஏ.டி.யு.).

2. கோத்தாரி சர்க்கரை தொழிற்சாலை தொழிலாளர்கள் யூனியன், காட்டூர் (சி.ஐ.டி.யு.).

3. காட்டூர் சர்க்கரை கம்பெனி தேசிய தொழிலாளர்கள் யூனியன் (ஐ.என்.டி.யு.சி.).

4. காட்டூர் சர்க்கரை தொழிலாளர் முன்னேற்ற யூனியன் (எல்.பி.எப.)

மேற்சொன்ன யூனியன்கள் வெவ்வேறு தேதிகளில் கீழ்க்காணும் சில கோரிக்கைகளை வற்புறுத்தி, 16-2-1978 தேதியன்றோ அல்லது அதற்குப் பிறகு எந்த தேதியிலும் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று நிர்வாகத்தினருக்கு வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தனர்.

(1) 1974-75, 1975-76, 1976-77-ஆம் ஆண்டுக்கான போனஸ்.

(2) 67 தொழிலாளர்களின் வேலை முறைபடுத்துவது.

(3) பருவ கால வேலை செய்யும் தொழிலுக்கு (Seasonal workers) ஒவ்வொரு வருட சர்வீஸ் உள்ள தொழிலாளர்களுக்கு 15 நாட்கள் ஊதியம் கொடுப்பது பற்றி. (ஆனால் இது பருவ கால தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு இல்லை).

(4) நிரந்தர தொழிலாளர்களுக்கு லே-ஆப் இல்லாமல் இருப்பதுபற்றி.

(5) கரும்பு பிழியும் திறன் அதிகமானதால் ஊதிய உயர்வு கொடுப்பது பற்றி.

(6) வேலை காலி இடங்களை நிரப்புதல் பற்றி.

(7) வீட்டு வாடகைப் படி உயர்த்துவது பற்றி.

(8) வேலை நீக்கம் செய்த (Dismissed) 3 தொழிலாளர்களை வேலையில் சேர்த்தல் பற்றி (இன்னும் மற்றவை).

வேலை நிறுத்த நோட்டீஸ் கிடைத்த உடனேயே திருச்சி தொழிலாளர் துறை அலுவலர், 13—2—1978ல் பேச்சு வார்த்தை நடத்தினர். மாவட்ட ஆட்சியாளரின் ஈடுபாட்டினால், நிர்வாகத்தினர் சட்டப்படியான குறைந்த பட்சமான 8.33 சதவிகிதம் போனஸ் கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். நிர்வாகம் 15—3—1978க்குள் 8.33 போனஸ் முன் பணமாகக் கொடுக்க ஒப்புக்

கொண்டனர். மேலும் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது. திருச்சி தொழிலாளர் துறை அலுவலர், இதா கோரிக்கைகளின் பேரில் 23—2—1978ல் பேச்சு வார்த்தை நடத்தினர்.

எனினும் தொழிலாளர்கள் 19—2—1978ல் "உள்ளிருப்பு வேலை நிறுத் தத்தில்" ஈடுபட்டனர். நிலைமை அமைதியாக இருந்ததாகக் கூறப்படுகிறது. சென்னை தொழிலாளர் துறை ஆணையரின் வேண்டுகோளுக்கு இணங்க, திருச்சி மாவட்ட ஆட்சியாளர் 19—2—1978ல் சமரசப் பேச்சு நடத்தினர், அச் சமரச பேச்சில் திருச்சி தொழிலாளர் துறை அலுவலரும் பங்கு கொண்டனர். இருதரப்பினரையும் விசாரித்த பிறகு, திருச்சி மாவட்ட ஆட்சியாளர் கீழ்க்காணும் ஆலோசனைகளை நிர்வாகத்தினருக்கு வழங்கினர் :—

1. 8.33 சதவிகிதம் 1976-77க்கு போனஸ் முன் பணமாகக் கொடுக்க வேண்டும்.

2. 1979ல் 67 தொழிலாளர்களின் வேலையை முறைப்படுத்த வேண்டும்.

3. எல்லா நிரந்தர தொழிலாளர்களுக்கும் 15 நாட்கள் ஊதியத்தையும் பருவ கால தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் ஊதியத்தையும் பணிக்கொடை யாகக் கொடுக்க வேண்டும்.

4. சிரான கரும்பு பிழியும் வேலை இருப்பதை முன்னிட்டு, நிரந்தாத் தொழிலாளர்களுக்கு 1978-79 சீசனில் லே-ஆப் கொடுக்கக் கூடாது.

வேலையிலிருந்து நீக்கிய மூன்று தொழிலாளர்களைத் திரும்பவும் வேலையில் சேர்க்க வேண்டும் என்று யூனியன்கள் வற்புறுத்தியதால் இதில் ஒப்பந்தம் எதும் எற்படுத்த இயலவில்லை. ஆனல் திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் அறிவுரைக்கு இணங்க, தொழிற் சங்கங்கள் தாங்கள் பின்பு வேலை நிறுத்தம் செய்யும் உரிமைக்குப் பாதிப்பு இல்லாத வகையில், தற்காலிகமாக இந்த வேலை நிறுத்தத்தை நிறுத்தி வைப்பதாக ஒத்துக் கொண்டனர்.

21—2—1978 மாலை 7-45 மணிக்கு வேலைக்குப் போவதாக திருச்சி மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் ஒத்துக்கொண்டபடி, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

நிர்வாகத்தினர், தொழிற் சங்கங்கள் ஆகிய இரு தரப்பினருடன் 27—2—1978 அன்று சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையாளர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் சுமுக முடிவு எற்படவில்லை. மீண்டும் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு தொழிலாளர் நலத் துறை ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

1978 மார்ச் 2]

திரு. கே. எஸ். கணபதி: அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையின்படி, ஸ்டிரைக் செய்வது நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர அவர்களுக்கிடையில் நல்ல தொடர்பு ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தை ஒன்றும் முடிவடையவில்லை. இன்று பிற்பகல் பேச்சு வார்த்தை நடக்கப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்று தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுபடியும் பணி கொடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதாக வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமைகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் தான் ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த மூன்று தொழிலாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டால்தான், நிச்சயமாக சுமுகமான நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு இதனால் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மூன்று தொழிலாளர்களும் பணியில் அமர்த்தப்படுவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான தொழிலாள சகோதரர்கள் என்னோடு பல்லாண்டு காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். எனவே என்னுடைய வார்த்தையில், இந்த அரசின் வார்த்தையில் மதிப்பு வைத்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அனைவரும் வேலைக்குச் சென்றுவிட்டார்கள். திடீரென்று வேலை நிறுத்தம் செய்ய மாட்டார்கள். மூன்று பேரைப் பொறுத்தவரையில், வழக்கு அட்ஜுடிகேஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அட்ஜுடிகேஷனுக்கு அனுப்புகிறோம் என்றாலே அரசைப் பொறுத்தவரையில், வேலை நீக்கம் செய்தது சரியல்ல என்பதால், விசாரணைக்கு அனுப்புகிறோம் என்றுதான் நோட்டில் எழுதி அனுப்புவோம். நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம் என்று எழுதுவோம். இன்று பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது. அதற்கு நானே செல்வதாக இருந்தேன். அவர்கள் ஒரு வாரம் கழித்து நடத்தலாமே, திருச்சிக்குப் போய்விட்டு வந்துவிடுகிறேன் என்று தொலைபேசியில் சொன்னார்கள். பிறகு இன்றே பேசலாம் என்றார்கள். நான் வேறு ஒரு பணிக்கு ஏற்கெனவே ஒத்துக்கொண்டுவிட்டதால், லேபர் கமிஷனர் கலந்துகொள்வார். பேச்சு வார்த்தை நடக்கும். சுமுகமான உறவு ஏற்பட்டுவிடும். உறுப்பினருக்கு எந்தவிதமான அச்சமும் இருக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.